# சைவநெறி I

கவனிக்க:

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. 1 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

---

01). “நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்…” எனும் பாடலில் துதிக்கப்படுபவர்

1. சிவன் 2. விநாயகர் 3. சக்தி 4. முருகன்

02). ஆடி முதல் மார்கழி வரையுள்ள காலம்

1. தட்சினாயண காலம் 2. உத்தராயண காலம்
3. இளவேனில் காலம் 4. வசந்த காலம்

03). ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் ஆலயம்

1. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் 2. நகுலேஸ்வரம்
3. திருக்கேதீச்சரம் 4. காரைநகர் சிவன் கோவில்

04). “பாவத்தின் கிரகம்”, “ஆயுட்காரன்” என அழைக்கப்படுபவர்

1. சனீஸ்வரன் 2. பரமேஸ்வரன்
3. சண்டேஸ்வரர் 4. விக்னேஸ்வரர்

05). இறந்தவர்களுக்காக ஒருவரை வரித்துக் கொடுத்தல்

1. அந்தியேட்டி 2. சிரார்த்தம் 3. மகாளயம் 4. ஏகோதிட்டம்

06). “சாந்தி சிரார்த்தம்” எனப்படுவது,

1. பிதிர் ஆசீர்வாதம் 2. இரட்சாபந்தனம்
3. மாலை மாற்றுதல் 4. கன்னிகாதானம்

07). விஜயரங்க சொக்கநாதரிடம் அமைச்சராக இருந்தவர்

1. தாயுமானவர் 2. குமரகுருபரர்
3. அருணகிரிநாதர் 4. அபிராமிப் பட்டர்

08). சமயச் சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களை உருவகக் கதைகளாகக் கூறுவன

1. சங்கிதைகள் 2. பிராமணங்கள்
3. ஆரணியங்கள் 4. உபநிடதங்கள்

09). “வேதங்கள் ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே…” எனப் பாடியவர்

1. திருமூலர் 2. மாணிக்கவாசகர்
3. சம்பந்தர் 4. நாவுக்கரசர்

10). தந்திரங்கள் எனச் சுட்டப்படுபவை

1. சாக்த ஆகமங்கள் 2. சிவாகமங்கள்
3. சங்கிதைகள் 4. உபாகமங்கள்

11). 'வாட்டமுறு சயந்தன் வானோர் சயந்தன் தமையெல்லாம் மீட்டு வருதி…..' என வீரவாகுத் தேவரிடம் கூறியவர்

1. முருகன் 2. இந்திரன் 3. பிரம்மன் 4. அக்கினி

12). காலனைக் காலால் உதைத்த கங்காதரன் குடி கொண்டிருக்கும் இடம்

1. திருத்தணிகை 2. திருக்கடவூர் 3. திருவேரகம் 4. திருப்பரங்குன்றம்

13). 'தொண்டர் சீர் பரவுவார்' எனப் போற்றப்பட்டவர்

1. சுந்தரர் 2. சேந்தனார் 3. சேக்கிழார் 4. திருநாவுக்கரசர்

14). ஒரு மண்டலம் என்பது,

1. நாற்பத்தெட்டு நாட்கள் கொண்டது 2. இருபத்து நான்கு நாட்கள் கொண்டது.
3. ஒன்பது நாட்கள் கொண்டது 4. பன்னிரண்டு நாட்கள் கொண்டது

15). நைமித்திய கிரியைகளுள் அடங்காத தொகுதி

1. மாசி மகம், மகாசிவராத்திரி 2. சாயரட்டை, காலைப்பூசை
3. மகாசிவராத்திரி, மகாமகம் 4. மாசி மகம், மண்டலாபிஷேகம்

16). பெரிய புராணத்தின் முதலாவது சருக்கம்

1. திருமலைச் சருக்கம் 2. வெள்ளானைச் சருக்கம்
3. திருநின்ற சருக்கம் 4. தில்லைவாணந்தணர் சருக்கம்

17). தேவாசிரியர் மண்டபம் அமைந்துள்ள இடம்

1. திருக்கடவூர் 2. திருவெண்ணை நல்லூர் 3. திருவாரூர் 4. திருச்சிராப்பள்ளி

18). 'ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே…' எனும் பாடலில் கண்டிகை எனக் குறிப்பிடப்படுவது,

1. விபூதி 2. உருத்திராக்கம் 3. திருவைந்தெழுத்து 4. சிவதீட்சை

19). எட்டாம் திருமுறையில் இடம்பெறும் நூல்கள்

1. திருமந்திரம், திருவாசகம் 2. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
3. திருவாசகம், திருக்கோவையார் 4. திருக்கோவையார், திருவிசைப்பா

20). கூன் பாண்டியன் கூன் நிமிர்ந்த பின்பு பெற்ற பெயர்

1. பாண்டியன் நெடுமாறன் 2. நிமிர்ந்த நெடுமாறன்
3. பாண்டிய மன்னன் 4. நின்றசீர் நெடுமாறன்

21). நாவுக்கரசரை சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலில் போட்ட போது பாடிய பதிகம்

1. மாசில் வீணையும்…………. 2. சொற்றுணை வேதியன்………
3. பண்ணினேர் மொழி…………. 4. கூற்றாயினவாறு……………

22). சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்ற ஈழத்து திருத்தலம்

1. திருக்கேதீச்சரம் 2. திருக்கோணேச்சரம்
3. முன்னேச்சரம் 4. நகுலேச்சரம்

23). தமிழ், பக்தியின் மொழி என மேலை நாட்டவர்கள் வியந்து கூறுவதற்கு காரணமாக அமைந்த நூல்

1. திருக்கோவையார்
2. திருவாசகம்
3. திருப்புராணம்
4. திருத்தொண்டர் தொகை

24). 'நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை...' எனக் கூறும் நூல்

1. தேவாரம்
2. திருமந்திரம்
3. பெரியபுராணம்
4. அற்புதத்திருவந்தாதி

25). வேதாந்தகேசரி, இராமகிருஸ்ண விஜயம் முதலான பத்திரிகைகளின் ஆசிரியராக விளங்கியவர்

1. விவேகானந்தர்
2. இராமகிருஸ்ணர்
3. விபுலாநந்தர்
4. தயானந்த சரஸ்வதி

26). ஆறுமுகம்பிள்ளைக்கு 'நாவலர்' பட்டத்தை வழங்கிய ஆதீனம்

1. திருப்பணந்தாள் ஆதீனம்
2. நல்லையாதீனம்
3. திருவாவடுதுறை ஆதீனம்
4. மதுரை ஆதீனம்

27). சதசத்து எனப்படுவது,

1. இறைவன்
2. ஆன்மா
3. மலங்கள்
4. உலகம்

28). சைவசித்தாந்தம் 'தாடலை' எனக் குறிப்பிடுவது

1. பக்தி
2. உறவு
3. முத்தி
4. பற்று

29). இருள்மலம் எனப்படுவது

1. திரேதாயி
2. ஆணவம்
3. கன்மம்
4. மாயை

30). "விடிவாமளவும் விளக்கனைய மாயை..." எனக் கூறியவர்

1. அருணந்தி சிவாச்சாரியார்
2. மெய்கண்டதேவர்
3. உமாபதி சிவாச்சாரியார்
4. மறைஞானசம்பந்தர்

31) சிவம், விந்து, சதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்பன

1. சிவதத்துவங்கள்
2. வித்தியா தத்துவங்கள்
3. சுத்த தத்துவங்கள்
4. ஆன்ம தத்துவங்கள்

32). பழவினைகளின் தொகுப்பு

1. சஞ்சிதம்
2. பிராரர்த்தம்
3. ஆகாமியம்
4. ஈசத்துவம்

33). திருவருட்பயனில் பசு நிலை பற்றிக் கூறப்பட்டுள்ள அதிகாரம்

1. பதிமுது நிலை
2. இருள்மல நிலை
3. உயிரவை நிலை
4. அருளது நிலை

34). இலிங்க வழிபாட்டில் முத்தியடைந்தவர்

1. சேரமான் பெருமான்
2. திருநீலகண்டர்
3. முருகநாயனார்
4. சிவகாமியாண்டார்

35). மகாபாரதத்தை தமிழில் பாடியவர்

1. கம்பர்
2. ஆறுமுகநாவலர்
3. வில்லிபுத்தூராழ்வார்
4. திருமூலர்

36). மலையக இராச்சியம் நிலவிய காலத்தில் முருக வழிபாட்டிற்காக அமைக்கப்பட்ட வழிபாட்டுத் தலம்

1. கடலாதெனிய விகாரை
2. எம்பக்க தேவாலயம்
3. இலங்காதிலக விகாரை
4. நாததேவாலயம்

37). சைவ சமயத்தவர்கள் முதலில் பெற்றுக்கொள்ளும் தீட்சை

1. விஷேட தீட்சை
2. மானிட தீட்சை
3. சமய தீட்சை
4. நயன தீட்சை

❄ கீழே தரப்பட்ட அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 – 40 வரையான வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

| **ஆலயங்கள்** | **தீர்த்தம்** | **விழா** |
|---|---|---|
| A. மாமாங்கேஸ்வரம் | D. சித்தாமிர்த புட்கரணி | G. சிவராத்திரி |
| B. திருக்கேதீச்சரம் | E. மகாமங்கை | H. ஆடிப்பூரம் |
| C. நயினை நாகபூசனி | F. பாலாவி | I. ஆடி அமாவாசை |

38). அறுபத்தி நான்கு சக்தி பீடங்களோடு தொடர்புடைய ஆலயம்

1. C D H
2. C D G
3. E F H
4. D E B

39). கிழக்கிலங்கையில் பிதிர்க்கடன் தீர்க்கும் தலத்தோடு தொடர்புடையது

1. C G E
2. H C E
3. A E I
4. B D H

40). ஈழத்தில் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலத்தோடு தொடர்புடையது

1. H C A
2. B F G
3. B C E
4. A C F

## சைவநெறி II

- முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
- முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

---

01. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக

I. இறைவனின் இரு நிலைகளும் எவை?

II. சிவவிரதங்கள் இரண்டினைத் தருக.

III. சூரிய பகவானுக்கும் உஷா தேவிக்கும் மகனாகத் தோன்றியவர் யார்?

IV. கந்தபுராணத்தின் காண்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

V. அபரக் கிரியை என்றால் என்ன?

VI. சுவேதனப் பெருமாள் எனும் இயற்பெயர் கொண்ட சந்தான குரவர் யார்?

VII. வீட்டில் தினசரி இடம்பெறும் சமயச் செயற்பாடுகள் இரண்டினைத் தருக.

VIII. இலங்கையிலுள்ள பஞ்சாங்கத்தின் இரு வகைகளும் எவை?

IX. இசைப் பாடல்களால் அமைந்த வேதம் எது?

X. வரதபண்டிதரால் எழுதப்பட்ட மருத்துவ நூல் எது?

(10x2=20 புள்ளிகள்)

02. I. மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக

II. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

அ. “பால் நினைந்தூட்டும்…………….”

ஆ. “உம்பர் தரு தேனுமணிக்…………………”

இ. “விநாயகனே வெவ்வினையை………………”

ஈ. “தனந்தரும் கல்வி தரும்………………”

உ. “குனித்த புருவமும்…………………..”

03. “ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகளில் மகோற்சவம் பிரதான இடம் வகிக்கின்றது”

I. மகோற்சவம் என்றால் என்ன?

II. கொடியேற்றத்தில் கொடிமரம், கொடிச்சீலை, கயிறு என்பன எவற்றை உணர்த்துகின்றன?

III. மகோற்சவ கிரியைகளையும் அவை உணர்த்தும் ஐந்தொழில் தத்துவங்களையும் சுருக்கமாக விளக்குக.

04. “சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நஞ் சுந்தரனும் சிற்கோல வாதவூர்த் தேசிகனும்…..”

I. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

II. தேவார முதலிகளையும் அவர்கள் முத்தியடைந்த தினங்களையும் குறிப்பிடுக.

III. தோணிபுரத் தோன்றலின் சமயப் பணிகளைச் சுருக்கமாக விளக்குக.

05. “சமயத்தின் கருப்பொருளாகக் கருதப்படுவன சடங்குகளாகும்”

I. கண்ணகி வழிபாட்டை இலங்கைக்கு அறிமுகம் செய்த மன்னன் யார்?

II. நாட்டார் கலைகள் மூன்று தருக.

III. நாகதம்பிரான் வழிபாட்டால் மக்கள் பெறும் நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.

06. “வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்….”

I. இருக்கு வேதத்தில் அதிக பாசுரங்களால் போற்றப்படும் தெய்வம் எது?

II. ஆகமம் கூறும் விடயங்கள் மூன்றினைத் தருக.

III. யசுர் வேதம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

07. பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

I. விபுலாநந்தர்

II. பாடசாலையில் சைவம்

III. பஞ்சாங்கம்

IV. தீபாவளிப் பண்டிகை